சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

வழக்கு எண். ஓ.எஸ். 118/2010

**DW 1 - பரமசிவம்** **09.09.2024**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

என் தகப்பனார் பெயர் ராமசாமி கவுண்டர் என்றால் சரிதான். அவர் 1985 ல் இறந்துவிட்டார் என்றால் 1962 ல் இறந்துவிட்டார். என் தாயார் பெயர் வள்ளியம்மாள் என்றால் சரிதான். என் தாயார் இறந்த வருடம் 1983 ஆகும். என் தகப்பனாருக்கு 4 ஆண் மக்கள், 4 பெண் மக்கள் என்றால் சரிதான். அதில் ஒருவர் வேலாத்தாள் என்றால் சரிதான். வேலாத்தாளின் மகள் தான் வாதி கவிதா என்றால் சரிதான். வேலாத்தாள் இறந்துவிட்டார் என்றால் சரிதான். என் சகோதரர் மயில்சாமிக்கு திருமணம் ஆகவில்லை என்றாலும், அவருக்கு குழந்தைகள் யாரும் இல்லை என்றாலும் சரிதான். மயில்சாமி 1999-ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். தாவாச்சொத்து என் தகப்பனாருக்கு சுயசம்பாத்திய சொத்து என்றால் பாகம் மூலம் கிடைத்த சொத்து ஆகும். பூர்விக சொத்து என்பதற்கு ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பூர்விக சொத்து என காட்ட ஆவணம் தாக்கல் செய்யாத நிலையில் தாவா சொத்துக்கள் என் தகப்பனாரின் சுயாஜ்ஜித சொத்துக்கள் என்றால் சரியல்ல. ராமசாமி கவுண்டரின் ஆண் வாரிசுகள் மட்டும் பாகப்பத்திரம் எழுதிக்கொண்டோம் என்றால் சரிதான். பாகப்பத்திரம்

எழுதிக்கொண்டதற்கு முன்பாக குடும்ப ஏற்பாடு ஏற்பட்டதாக சொல்லியுள்ள நிலையில் குடும்ப ஏற்பாடு பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். குடும்ப ஏற்பாடு என்ற ஒன்று ஏற்பட்டிருந்தால் அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் அவ்வாறு ஏற்படாத நிலையில் தான் குடும்ப ஏற்பாடு பத்திரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அதனால் குடும்ப ஏற்பாட்டின்படி ஆண்வாரிசுகள் அனைவரும் 01.10.1993 ம் தேதி ஏற்படுத்திகொண்ட பாகப்பத்திரம் செல்லத்தக்கதல்ல என்றாலும் வாதியை கட்டுப்படுத்தாது என்றாலும் சரியல்ல. தாவா சொத்துக்கள் அனைத்தும் ராமசாமிகவுண்டரின் சுயாஜ்ஜித சொத்துக்கள் என்பதால் அதை பொறுத்து நாங்கள் பாகம் பங்கிக்கொள்ள இயலாது என்றால் சரியல்ல. என் சகோதரிகளின் சம்மந்ததின்பேரில் பாகப்பத்திரம் எழுதியதாக சொல்லும் நிலையில் பெண்வாரிசுகளை பாகப்பத்திரத்தில் தரப்பினார்களாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. என் சகோதரிகளின் கையெழுத்தை சாட்சி கையெழுத்தாக பாக பத்திரத்தில் பெறவில்லை என்றால் என் சகோதரிகள் கையெழுத்து வேண்டாம் என சொல்லிவிட்டார்கள். பெண் வாரிசுகளின் சம்மதம் பெற்று பாகப்பத்திரம் ஏற்படுத்தியிருந்தால் அவர்களின் கையெழுத்தை பெற்றிருப்போம் என்றாலும், என் சகோதரிகளுக்கு தெரியாமல் மறைத்து எழுதியதால் தான் கையெழுத்து பெறவில்லை என்றால் சரியல்ல. அதனால் 01.10.1993 தேதியிட்ட பாகப்பத்திரம்

வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. என் சகோதரர் மயில்சாமி எழுதியதாக சொல்லும் உயிலில் யார் சாட்சி கையெழுத்து செய்தார்கள், எங்கு வைத்து எழுதப்பட்டது, உயில் தயாரித்தவர் யார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் தெரியாது, இறந்தபின் தான் தெரியும். இறந்தபோன மயில்சாமி நான் சொல்வதுபோல் உயில் எதுவும் எழுதவில்லை என்றால் சரியல்ல. என் மகன் சரவணக்குமாருக்கு எழுதியதாக சொல்லும் உயில் போலியாக எங்களால் தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1993 ல் பாகப்பத்திரம் எழுதிய பிறகு வருவாய் ஆவணங்கள் எப்போது பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்தபிறகுதான் வருவாய் ஆவணங்கள் பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வாதியின் தாயார் வேலாத்தாள் உயிருடன் இருக்கும்வரை கூட்டு சுவாதீனத்தில் இருந்தோம் என்றால் தனித்தனியாகத்தான் இருந்தோம். அவர் உயிருடன் இருந்தபோதே பாகம் கேட்டார் என்றாலும் நாங்கள்தான் சாக்குபோக்கு சொல்லி காலம் தாழ்த்தினாம் என்றால் சரியல்ல. வேலாத்தாள் இறப்பிற்கு பிறகு வாதி கூட்டு சுவாதீனத்தில் இருந்தார் என்றால் சரியல்ல. அவரது பாகத்தையும் சுவாதீனத்தையும் மறுத்ததால்தான் வாதி வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. பிவாசாஆ 3- பசலை எண்.1428 க்கான அடங்கல் என்றால் சரிதான். அதற்கு முன்பு பெயர் மாற்றம் செய்யாததால் தான் முந்தைய அடங்கலை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 27.12.2006

உயிலை யார் யாருக்கு எழுதினார்கள் என பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் அதுபற்றி தெரியாது. மயில்சாமி எழுதிவைத்த உயிலும், 27.12.2006 தேதியிட்ட உயிலும் வழக்கிற்காக தயாரிக்கப்பட்டது என்றாலும் அதன் அடிப்படையில் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இன்றுவரை இரு உயில்களையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பாகபத்திரம், உயில் ஆகியவை தன்னிச்சையாக நாங்கள் ஏறப்டுத்திக்கொண்டதால் அது வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வாதி தானாகவே உரிமையை எனக்கு விட்டுகொடுத்தாக எதிர் உரையில் சொல்லியுள்ளது உண்மையல்ல என்றால் சரியல்ல. தாவாசொத்துக்கள் ராமசாமிகவுண்டரின் சுயாஜ்ஜித சொத்துக்ள் என்பதால் வாதி கோரிய பாகம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்புசெய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி